புகார்கள் 30-12-1990 முடிய கிடைக்கப் பெற்றுள்ளன. 22க்கு முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது. 68 விசாரணையில் இருக்கின்றன. அதேபோன்று வடஆற்காடு அம்பேத்கார் 14 பெறப்பட்டு, ஒன்று முடிக்கப்பட்டு, 13 விசாரணையில் உள்ளன. தென் ஆற்காடு 4 பெறப்பட்டு, ஒன்று முடிக்கப்பட்டு, 3 விசாரணையில் உள்ளன. தஞ்சாவூரில் 6 பெறப்பட்டு, 3 முடிக்கப்பட்டு, 3 விசாரணையில் உள்ளன. புதுக்கோட்டை 8 பெறப்பட்டு, ஒன்று முடிக்கப்பட்டு, 7 விசாரணையில் உள்ளன. திருச்சியில் 6 பெறப்பட்டு, ஆறும் விசாரணையில் இருக்கின்றன. நீலகிரி 4 பெறப்பட்டு நான்கும் விசாரணையில் இருக்கின்றன. திண்டுக்கல் காயிதே மில்லத்தில் ஒன்று பெறப்பட்டு ஒன்றும் முடிக்கப்பட்டுள்ளது. பசும்பொன் தேவர் திருமகனில் 2 பெறப்பட்டு, இரண்டும் விசாரணையில் இருக்கின்றன. காமராஜர் மாவட்டத்தில் 20 பெறப்பட்டு, 4 முடிக்கப்பெற்று, 16 விசாரணையில் இருக்கின்றன. திருநெல் வேலி-கட்டபொம்மன் 3 பெறப்பட்டு, ஒன்று முடிக்கப்பட்டு, 2 விசாரணையில் இருக்கின்றன. அதுபோன்று இராமநாதபுரம் மாவட்டத்தில் இரண்டு பெறப்பட்டு இரண்டும் விசாரணையில் இருக்கின்றன.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புகார்கள் கொடுக்கப்பட்ட பிறகு, விசாரணைக்கு எடுத்து, முடிவு எடுப்பதில் காலதாமதம் ஆகிறது என்று பொதுமக்கள் மத்தியிலே ஒரு கருத்து இருக்கிறது. அதைப் போக்க விரைவான நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு பொதுவான குற்றச் சாட்டு, அப்படி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படி தனித்து ஏதாவது குற்றச்சாட்டு இருக்குமானால், உடன் நட வடிக்கை மேற்கொள்ளப்படும்.

குச்சிக்கிழங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்.

* 4402—திரு. கோ. வீரையன் :
மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டத்தில் குச்சிக்கிழங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனை யில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சேலம் மாவட்டத்தில் குச்சிக்கிழங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே, சேலம் மாவட்டத்தில் குச்சிக்கிழங்கு அதிகமாக உற்பத்தி செய்யும் நிலை இருக்கிறது. அதிலிருந்து ஜவ்வரிசி மாவுகள் போன்ற பொருள்கள் உற்பத்தி செய்கின்ற 100க்கு மேற்பட்ட தொழிற்சாலைகள் அந்தப் பகுதியிலே தனியாரால் நடத்தப்படுகின்றன. தனியாரிடம் குச்சிக்கிழங்கு உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதைக் கருத்தில் கொண்டு, அங்கே ஓர் இடத்திலாவது குச்சிக்கிழங்கிலிருந்து மாவு உற்பத்தி செய்கின்ற ஒரு கூட்டுறவு பேக்டரியை உருவாக்கி, விவசாயிகள் நலனைப் பாதுகாக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் குச்சிக்கிழங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பது கேள்வி. எனவே, உற்பத்தியாளர் விற்பனை செய்யும் சங்கங்கள் ஏற்கெனவே தொழில் வணிகத் துறையின் கீழ் இரண்டு இருக்கின்றன. தொழில் ரீதியாக ஜவ்வரிசியும், மாவு போன்றவையும் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்குவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்போது உள்ளது.

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குச்சிக்கிழங்கிலிருந்து உப பொருள்களை உற்பத்தி செய்யும் பேக்டரி கூட்டுறவுத் துறையில் ஆரம்பிக்கப்படுமா என்பதுதான் நான் கேட்ட மூலக்கேள்வி. கேள்விப் பிரிவிலே திருத்தப்பட்டிருந்தால் அதற்கு நான் பொறுப்பல்ல. குச்சிக்கிழங்கிலிருந்து இதர பொருள்கள் உற்பத்தி செய்வது பரிசீலனையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்தப் பரிசீலனை முடிந்து, வரப்போகிற ஆண்டில் கூட்டுறவுத் துறையில் அந்த பேக்டரியைத் துவக்க முயற்சி எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

9-50 மணி

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: பேரவைத் தலைவரவர்களே, செயற்குறிப்பு பரிசீலனையில் இருக்கிறது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்கொப்ப விரைவு படுத்தப்படும்.